# ஆர்.சூடாமணி சிறுகதையில் வாழ்வியல்

29

**ப.சுகன்யாதேவி**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**சுயநிதிப்பிரிவு, வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு - 638012**
**மின்னஞ்சல் - suganyasritamil3@gmail.com**

ஆய்வு நோக்கம் - உளநிகழ்வுகளை வெவ்வேறு கோணத்தில் காட்டும் ஆர்.சூடாமணி சிறுகதையில் காணும் வாழ்வியல் சிந்தனைகளை வெளிக்கொணர்தல்

**ஆய்வுச்சுருக்கம்**

**உளவியல் எழுத்தாளர் எனப் போற்றப்படும்** ஆர்.சூடாமணி அவர்கள் ஆரவாரம் இல்லாமல், மிக எளிமையாக, மத்திய தர வாழ்க்கையையும் அதன் மனிதர்களையும், குறிப்பாக பெண்களையும் பற்றி நிறைய எழுதியுள்ளார். மரபான பார்வையில் பெண் விடுதலையையும், சமூக உறவுகளின் நுட்பங்களையும், ஒழுக்க அற நெறிகளையும் பேசியவர். அன்பு உள்ளம் - குடும்ப சூழல் எவ்வாறு சிரமமாக இருந்தாலும் தன் குடும்பம் என நினைத்து மிகச் சிறப்பாக செயல்படுத்தும் பாரதிக்கு அன்பு உள்ளத்தினை அவரின் படைப்பியல் காட்டும் வாழ்வியல் தத்துவமாகும்..

திறவுச்சொல் – நோன்பு – காரடையன் நோன்பு – அத்திம்பேர் – வேண்டுதல் – சரடு – விசித்திரம் – இன்பவியல் – துன்;பவியல்.

**முன்னுரை**

ஆர்.சூடாமணி அவர்களின் சிறுகதையில் கூறிய கருத்துகள் பெண்கள் அடிமையிலிருந்து மீண்டு எழுந்து வர ஊக்க கருத்தும் ஆலோசனை அறிவுரைகளும் செறிந்து காணப்படும். மேலும் வாழ்வியல் ஒழுக்கங்களையும் நீதி தவறாமையும் பற்றியும் வாழ்வியல் நெறிகளை எடுத்துரைக்கின்றன.

**நோன்பின் பலன்**

யமுனா கந்தனுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். அவளின் மனம் விளையாட்டிலேயே இருந்த்து. அம்மா கூப்பிடுவதைக் கூட விரும்பவில்லை. அம்மா கூப்பிட்டுக் கொண்டே இருந்த்தாலே யமுனா அவுட் ஆகிவிட்டாள். அம்மா கூப்பிட்டதால் நான் அவுட் ஆகிவிட்டேன் என்று கூறிக்கொண்டு இருக்கும்போதே ”ஏன்டி அக்காவெல்லாம் உள்ளே காத்துக் கொண்டிருக்கிறாள். இப்பொழுது பாண்டி ஆட்டம் என்ன வந்தது - விளையாட்டெல்லாம் அப்புறம் பார்க்கலாம் ஆடலாம்” என்று கூறி அவளை அழைத்து செல்லச் செல்ல தன்னுடன் விளையாடிய கந்தனை சிறிது நேரம் கழித்து வரச்சொன்னாள்.

காரடையான் நோன்பில் அனைவரும் கயிறு கட்டிக் கொள்ள வேண்டும். அப்படி என்றால்

என்ன என்றதும், கணவன் நன்றாக இருக்க வேண்டும் என்று கட்டிக் கொள்வர். அப்படின்னா எனக்கு எட்டு வயசு தான் ஆகுது. என்னை விடு என்றாள். கயிறு கட்டிக் கொண்டால் வரப்போகிற புருஷன் நலமாக இருப்பான் பேசாமல் வா என்று அழைத்துக் கொண்டு போனாள். அவளின் பெரிய அக்காவின் கணவர் அஸ்ஸாமில் இருப்பதால் அவர் நலமாக இருக்க வேண்டும் என்று கட்டிக் கொண்டாள். ஆனால் யமுனாவின் மனமோ கந்தனுடன் ஆடும் பாண்டி ஆட்டத்தையே நினைத்துக் கொண்டிருந்தது. பூஜை முடிந்த்தும் விளையாட வந்தாள். எப்போதும் விளையாடிக் கொண்டே இருக்கிறாய் படிப்பதில்லை என்ற சின்ன அத்திம்பேர் கூறியபடியே வந்தார். நான் கந்தனோட விளையாண்டா என்ன கெட்டுப் போய்விடும் என்று யோசிக்காமல் பதில் அளித்து விட்டு திரும்பவும் கந்தனுடன் விளையாடத் தொடங்கினாள். அவனும் மீண்டும் தோற்று விட சரி நாளைக்கு விளையாடலாம் என்றும் கூறி சென்று விட்டாள்.

மறுநாள் கந்தனை விளையாட அழைக்க அவன் வரவில்லை. அவனுக்கு உடம்பு சரியில்லை. விளையாட வரமாட்டான் என்றாள் அம்மா. யமுனாவின் மனம் படிக்க இயலவில்லை. அவனுக்கு என்ன ஜுரமாக இருக்கும். அவனோடு விளையாடாமல் எப்படி இருக்கமுடியும்.

ரொம்பவும் கஷ்டப்படுவான் மருத்துவர்கள் கசப்பு மருந்து தருவார்களே, எப்படி பொறுத்துக் கொள்வான் என்று நினைத்ததும் அவளுக்கு அழுகை வந்துவிட்டது. பல நாட்கள் சென்றன. கந்தனின் உடம்பு சரியாகவில்லை. மோசமாகிக் கொண்டே இருப்பதாக கந்தனின் அப்பா கூற யமுனாவின் தாத்தா இந்த மருந்தைக் கொடு டாக்டரின் மருந்துகள் தேவையில்லை சரியாகிவிடும் என்று கூறினார்.

திருப்பதி வெங்கடாசலபதிக்கு வேண்டுதல் பண்ணு சரியாகிவிடும் என்றாள். இவர்கள் பேசுவதைக் கேட்ட யமுனா மனம்பாடுபட்டது. கந்தன் சாகக் கூடாது. அவன் ரொம்பவும் நல்லவன். பொய் சொல்லமாட்டான். அவன் சாகக்கூடாது பெருமாளே, என்னிடமிருந்து எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள். படம் நிறைந்த புத்தகம், புது சங்கிலி செயின் எல்லாவற்றையும் கொடுத்துவிடுகிறேன். பெருமாளே என்று வேண்டினாள். தொடர்ந்து இரண்டு நாட்களாக வேண்டியவள் கண்ணில் நோன்பு சரடு பட்டதும் அவள் அம்மா கூறியது ஞாபகம் வர நோன்பு சரடு கட்டியதும் சின்ன அத்திம்பேர் வரவில்லையா, பெரிய அக்காவுக்கு அஸ்ஸாமிலிருந்து கடிதம் வரவில்லையா என்று நினைத்தும் வேகவேகமாக பூஜை அறைக்குச் சென்று பெருமாள் முன் கந்தனைக் காப்பாற்று அவனையே நான் திருமணம் செய்து கொள்கிறேன். நான் சரடைக்கட்டிக் கொண்டேன். வரப்போகிற புருசன் நன்றாக இருக்க வேண்டும். கந்தனைக் காப்பாற்று என்று வேண்டினாள். அவனும் குணமாக தாத்தா அவரின் நண்பரின் மருந்தால் குணமானதாக நம்பினார்.

வேங்கடாசபதிக்கு கண்கண்ட தெய்வம் என்றாள் பாட்டி. ஆனால் யமுனா மனத்திற்குள் பெருமிதம் புன்னகை தவழ்ந்து மறைந்த்து.

**கதையின் நீதி :** இறைவன் மீது நம்பிக்கை வைப்பது வீண் போகாது என்ற சொல்லுக்கு இணங்க கந்தனுக்கு நோய் குணமாகி மீண்டும் விளையாடினான் யமுனாவுடன் கந்தன்.

**அன்பு உள்ளம்**

பாரதி பிரசவத்திற்கு தாய் வீட்டிற்கு வரும்போது ராமனையும் கூடவே வைத்துக் கொள்கிறாயா என்று கணவர் சதாசிவம் கேட்க, ஆமாம் மூத்த பிள்ளையும் தானே கூட வருவான். இல்லை இவன் மூத்த மனைவி பிள்ளை. இதனால் உன் அம்மா சம்மதிக்க மாட்டார். நானே உடன் அழைத்துக் கொள்கிறேன் என்று கூறி குழந்தையிடம் கேட்க, போ அப்பா... அம்மாவை விட்டு நான் இருப்பேனா? நீ வேண்டுமானால் ஊருக்குப் போ என்று கூறி அவளின் கழுத்தை கட்டிக் கொண்டான்.

அம்மா என்று அழைக்கக் கற்றுக் கொண்டு முதன் முதலில் அழைத்ததே பாரதியைத் தான். ஆனால் பாரதியின் அம்மா ஜானகிக்கு இவனைப் பிடிக்கவில்லை. பாரதி படுத்து இருக்கும்போது சாதம் போடு என்றான். ஜானகி உடனே திட்ட ஆரம்பித்துவிட்டாள். இவனை அடித்து வளர்க்கவில்லையா என்றதும் என் பையனை நான் ஏன் அடிக்கணும் என்றதும் பாட்டிக்கு என்னை பிடிக்கவே இல்லை என்றான் ராமன். பாட்டி இருக்கட்டும் வா சாதம் போடுகிறேன் என்று அழைத்துக் கொண்டாள். அம்மா உன் மடியில் உட்கார்ந்து சாப்பிடுகிறேன் என்றான். படுத்திருந்தவளை எழுப்பியது மட்டுமில்லாமல் மடியில் வேறு பாரதி தன் விழியால் விழித்துப் பார்த்தாள். பின்பு அவனை தூக்கி மடியில் அமர்த்தி உணவு ஊட்ட ஆரம்பித்தாள். எந்நேரமும் பாரதியிடமே இருந்தான்.

பாரதியின் கடைசி தங்கை சரோஜாவிற்கு பத்து வயது. இவளுக்கு இராமனுடன் விளையாடுவது மிகவும் பிடிக்கும். ஒருமுறை அவள் எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்து நானும் எழுதறேன் என்று அம்மாவிடம் கேட்க, பாரதியும் சரோ ஒரு பென்சில் இருந்தா கொடு என்றதும் சந்தோஷமாக சரோவும் கொடுத்தாள். ஆனால் இடையில் ஜானகி வந்து துப்பு கெட்டவள் ஒரு நாளைக்கு எத்தனை பென்சிலைத் தொலைக்க எவனோ பெற்ற பிள்ளைக்கெல்லாம் இங்கே பென்சில் சப்ளை பண்ணினால் உருப்பட்டாப் போலத்தான் என்று கூற பாரதிக்கு கோபம் வந்து ராமா உனக்கு எத்தனை பென்சில் வேண்டும், வேறு என்னென்ன வேண்டும் கேள் நான் வாங்கித் தருகிறேன் என்று கூறி வேலையாளிடம் பணம் கொடுத்து அனுப்பினாள்.

இரவு இராமன் பாரதியிடமே படுத்துக் கொள்வான். அப்படியிருக்க ஒரு நாள் தூங்கி எழுந்தும் பாரதி அருகில் இல்லாததால் அம்மா, அம்மா என்று கத்தினான். உடனே அவனின் பாட்டி அவனை திட்டி அடித்து தள்ளிவிட்டாள்.

அவனும் அழுதுகொண்டே ஒரு ஓரத்தில் அமர்ந்து கொண்டு அங்கு நடப்பதை பார்த்தான். அவர்கள் எல்லோரும் பரபரப்பாக நடந்துகொண்டு ஆஸ்பத்திரி மருந்து, மாத்திரை, துணி என்று பேசிக் கொண்டனர். அம்மாவுக்கு தான் உடம்பு முடியவில்லையா என்று பயந்து நானும் வருகிறேன் என்று கேட்டான். அவனின் பாட்டி வீட்டுலதா சரியா தூங்க விட மாட்டேங்குற அங்க ஒரு வாரமாவது நிம்மதியா இருக்கட்டும் என்று கூறிவிட்டாள் பாட்டி.

ஒரு ஓரமா நின்று அம்மாவ பாத்துட்டு மட்டும் வந்தர்றேன் என்று கெஞ்சி கேட்டும்

பயனில்லை. இவன் அம்மாவைப் பார்க்காததாலும், சாப்பிடாத்தாலும், அனாதை என்ற உணர்வை தாங்கியதாலும், அவன் தூங்கவில்லை, யாரிடமும் பேசவில்லை, தனிமையிலேயே இருந்தான்.

ஒரு நாள் இரவு பாரதி படுத்திருக்கும்போது கதவின் ஓரத்தில் ஒரு உருவம் நிற்பதை கவனித்தாள். அது குழந்தை ராமன், அவனை பிடித்தாள். ராமன் உணர்வு அற்றவனாக இருந்தான். அவனை மடியில் வைத்து கொண்டாள் பாரதி. வருத்தத்துடன் பார்க்க நீ என் அம்மாவா இல்லையா என்று திடுக்கிட்டு கேட்க பாட்டி தான் கூறினாள். மனதில் பதிந்திருக்கும் எண்ணத்தை மாற்ற அம்மாவின் உணர்வுகளை கூற அவனும் ஆமாம் சாதம் போடுகிறாள், தூங்க வைக்கிறாள். இதை அனைத்தும் நான் உனக்கு பண்ணவில்லையா என்றதும் ஆமாங்க அம்மா என்றான் குழந்தை ராமன்.

முதலில் பாட்டி சொன்னதும் எனக்கு அழுகை வந்த்து. பாரதியின் கரங்கள் அவனை அன்போடு தூக்கியது.

அப்பொழுது தொட்டிலில் விசித்திர பொருள் இருப்பதைப் பார்த்ததும், உன் தம்பிப் பாப்பா போய் தொட்டுப்பார் என்றாள். இரண்டு நாளில் தம்பிக்கு பெயர் வைக்க வேண்டும் என்ன பெயர் என்று சொல் எனக்கு தெரியாது என்றான். நீ ராமன் அவனுக்கு லட்சுமணன் என்று பெயர் வைக்கலாம் என்று பாசத்தை வெளிப்படுத்தினாள் பாரதி.

ஆர்.சூடாமணி அவர்கள் சிறுகதையில் பெண் எல்லா இடங்களிலும் வீரமாக உள்ளாள் என்பதை அவரின் எல்லா கதைகளிலும் காணலாம். இலக்கிய பெண்கள் போல, பாரதி கதாபாத்திரம் குடும்ப சூழல் எவ்வளவு சிரமாக இருந்தபோதும் குடும்பத்தை மகிழ்ச்சிகரமாக வைத்துக் கொள்கிறாள்.

**சிறுகதையின் முடிவு**

சிறுகதையின் முடிவு இன்பகரமாக அமைய வேண்டும் எனச் சிறுகதை வளர்ச்சியின் தொடக்க காலத்தில் எதிர்பார்க்கப்பட்டது. பல ஆசிரியர்களுக்கு கதை முடிவில் சுபம் என்று போட்டால் தான் திருப்த்தி. ஆனால் ஒரு பலவீனம் என்பது கி.ரா.வின் கருத்து. வாழ்வு என்பது எப்போதும் மகிழ்ச்சியானது அல்ல, அழுகையும் உண்டு. ஆகவே துன்பியல் முடிவுகளையும் ஒத்துக் கொள்ள வேண்டும் என்று கூறப்படுகின்றன.

பெயின் என்ற திறனாய்வாளர் ஒரு கதை இன்பியல் முடிவினாலோ அல்லது துன்பியல் முடிவினாலோ அழகு பெற்றுவிடாது. இவற்றில் எது சரியான பொருத்தமான முடிவாக உணரப்படுமோ அத்தகைய முடிவில்தான் அக்கதை வெற்றி பெற முடியும் என்கிறார்.

ஆர். சூடாமணி சிறுகதை ஆசிரியர் கூறுவது கதையின் உச்சநிலையும் முடிவும் ஒன்றாகச் சில கதைகளில் அமைந்திருக்கும். அதாவது கதையின் உள்ளீடு உச்சி நிலையிலேயே முழு தெளிவைப் பெற்று அத்துடன் கதை முடிந்துவிடும். ஒரே கதாபாத்திரத்தைச் சுற்றி வரும் கதையில் உச்சநிலையும் முடிவும் ஒன்றாகவே இருக்கும். பெரும்பாலும் கதை உச்சக் கட்டத்தை அடைந்த பிறகு ஓரிரு வார்த்தைகளில் அடுக்கமாக முடித்துவிட வேண்டும்.

**முடிவுரை**

முதல் கதையில் நோன்பின் பலன் கூறுவது நம்பிக்கை இறைவன் மீது வைத்திருக்கும் அன்பால் உடல்நலக்குறைவு குணமாகிவிடுகிறது. இரண்டாவது கதையில் அன்பு உள்ளம் - இச்சிறுகதை கதாபாத்திரம் பாரதி தான் பெற்றெடுக்காத குழந்தையிடம் பாசம் காட்டி உணவு கொடுத்து கவனித்து கொள்ளும் அன்பு உள்ளம் கொண்டவளை காட்டும் சிறுகதை ஆசிரியர் ஆர்.சூடாமணி அவர்கள் கூறுவது என்வென்றால் பெண்கள் அனைத்து நிலைகளிலும் மேம்பட்டவர்களாக திகழ வேண்டும். உணர்ச்சி வசப்பட்டு எந்த சூழலிலும் தாழ்ந்துவிடக்கூடாது. மன உறுதியோடு செயல்பட வேண்டும். பெண் அடிமை நிலையில் இருந்து நீங்கி வர வேண்டும்.

**துணைநூற்பட்டியல்**

1. இலக்கியச்சுவை - முனைவர். தமிழ்செம்மல், ம.ரா.போ. குருசாமி.
2. பன்முக நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர். கா.வாசுதேவன்.
3. புதிய தமிழ் இலக்கிய வரலாறு - சிற்பி பாலசுப்பிரமணியம், நீலபத்மநாபன்.